
14 செப்டம்பர் 2023

தேசிய மற்றும் சர்வதேச செய்திகள்

| | |
|---|---|
| கேரளாவில் மீண்டும் நிபா வைரஸ் பரவியுள்ளது  | செய்தி<br><br>கோழிக்கோடு மாவட்டத்தில் வைரஸ் தொற்றால் இரண்டு பேர் உயிரிழந்துள்ள நிலையில், நிபா வைரஸ் பயம் கேரளாவுக்கு திரும்பியுள்ளது.<br><br>நிபா வைரஸ்<br>• நிபா வைரஸ் (NiV) நோய்த்தொற்று என்பது விலங்குகளிடமிருந்தும் மனிதர்களிடமிருந்தும் பரவும் ஒரு நோயாகும். இது விலங்குகள் மற்றும் மனிதர்களிடையே கடுமையான நோய்களை ஏற்படுத்துகிறது.<br>• நிபா வைரஸ் மூளை காய்ச்சலை உண்டாக்கும் உயிரினம் மேலும் இது ஆர்என்ஏ அல்லது ரிபோநியூக்ளிக் அமில வைரஸ் ஆகும். இது பரமிக்சோவிரிடே(Paramyxoviridae) குடும்பத்தைச் சேர்ந்த ஹெனிபா வைரஸ்(Hendra ) இனமாகும் மேலும் இது ஹென்ட்ரா வைரஸுடன் (Hendra Virus) நெருங்கிய தொடர்புடையது..<br>• பழ வௌவால்கள் அல்லது ஸ்டெரோபோடிடே குடும்பத்தைச் சேர்ந்த பறக்கும் நரிகள் நிபா வைரஸின் இயற்கையாக பரப்ப கூடியவை .<br>• நிபா வைரஸானது வவ்வால் சிறுநீரிலும் மற்றும் வவ்வால் மலத்திலும் மேலும் அதன் உமிழ்நீரிலும் மற்றும் பிரசவ திரவங்களிலும் உள்ளது.<br>• இது முதன்முதலில் 1999 இல் மலேசியா மற்றும் சிங்கப்பூரில் பன்றி வளர்ப்பவர்களிடையே கண்டறியப்பட்டது.<br>• மலேசிய கிராமமான சுங்காய் நிபாவில் பன்றி வளர்ப்பாளர்கள் வைரஸ் மூலம் மூளை காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டனர் எனவே அவ் வைரஸுக்கு நிபா என பெயர் வந்தது<br><br>பரவும் முறை:<br>• இந்த வைரஸ் வேகமாக பரவுகிறது மற்றும் பெரும்பாலும் மரணத்தை விளைவிக்கிறது.<br>• பாதிக்கப்பட்ட வௌவால்களின் வெளியேறும் கழிவுகள் மற்றும் அதன் சுரப்பிகள் மூலம் வைரஸை வெளியேறுகின்றன.<br>• இந்த வைரஸ் காற்று வழியாக பரவ கூடிய வகை அல்ல .<br>• ஆனால் இது பாதிக்கப்பட்ட வௌவால்கள், பன்றிகள் ஆகியவற்றுடன் நேரடியாக பரவுகிறது. |

| | |
|---|---|
| | • மற்ற NiV- நோய்த்தொற்றுள்ளவர்களிடமிருந்து மனிதனுக்கு மனிதனுக்கு பரவும் தன்மை கொண்டது<br><br>அறிகுறிகள்:<br><br>• NiV நோய் தொற்று கடுமையான சுவாசக் கோளாறு, மூளை வீக்கம், காய்ச்சல், தலைவலி, சோர்வு , மற்றும் மயக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தும்<br><br>சிகிச்சை:<br>• மனிதர்களுக்கோ விலங்குகளுக்கோ இந்த நோய்க்கான தடுப்பூசி இல்லை.. |
| லிபியா நிலநடுக்கம் | செய்தி<br><br>கிழக்கு லிபியாவில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 5,300 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளதாகவும் அஞ்சப்படுகிறது.<br><br>முக்கிய குறிப்புகள்<br>• வட ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள லிபியா பெரும்பாலும் பாலைவனமாகவும் எண்ணெய் வளம் மிகுந்த நாடாகவும் உள்ளது.<br><br>• ஆப்பிரிக்காவில் உள்ள லிபியா நாட்டில் மிகப்பெரிய எண்ணெய் இருப்பு உள்ளது மேலும் உலகிலேயே மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் லிபியா நாடும் ஒன்றாகும் .<br><br> |
| சதுப்பு நிலங்களில் மோட்டார் படகுகள் பயன்படுத்த கூடாது - தேசிய பசுமை தீர்ப்பாயம் மத்தியப் பிரதேசத்துக்கு உத்தரவு | செய்தி<br><br>தேசிய பசுமை தீர்ப்பாயம் (NGT) போஜ் தால் ஏரியில் (போஜ் சதுப்பு நிலம் இப்போது ராம்சார் தளம் என்று அழைக்கப்படுகிறது) மற்றும் பிற சதுப்பு நிலங்களில் பயணக் கப்பல்கள் மற்றும் பிற மோட்டார் இயந்திர படகுகள் இயங்க தடை விதித்துள்ளது |

To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App




போஜ் சதுப்பு நிலம்

- போஜ் சதுப்பு நிலம் மத்திய பிரதேசத்தில் உள்ள போபால் மாவட்டத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது.
- இந்த சதுப்பு நிலத்தில் மனிதனால் உருவாக்கப்பட்ட இரண்டு ஏரிகள் உள்ளன - போஜ் தால் ஏரி மற்றும் சோட்டா தலாப் ஏரி ஆகும்.
- மத்திய இந்தியாவில் உள்ள மனிதனால் உருவாக்கப்பட்ட பெரிய ஏரிகளில் மிகப் பழமையான போஜ் தால் ஏரியை 11 ஆம் நூற்றாண்டில் கோலன்ஸ் ஆற்றின் குறுக்கே மண் அணை கட்டுவதன் மூலம் மன்னர் போஜ் உருவாக்கியுள்ளார். சோட்டா தலாப் ஏரியானது கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு முன்பு பெரும்பாலும் போஜ் தால் ஏரியில் ஏற்பட்ட கசிவுகளிலிருந்து கட்டப்பட்டது.
- இந்த ஏரிகளில் உயிரியல் பன்முகத்தன்மை மிகுதியாக உள்ளது குறிப்பாக பெருநீர்த்தாவரங்கள், தாவர மிதவை உயிரிகள்(Phytoplankton) , மிதப்பு நுண் விலங்குகள்(ZooPlankton) , பலதரப்பட்ட மீன் வகைகள், இடம்பெயரும் பறவைகள், பூச்சிகள், ஊர்வன உயிரினங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள்.உள்ளன
- இது 2002 இல் ராம்சார் தளமாக அறிவிக்கப்பட்டது.




தேசிய பசுமை தீர்ப்பாயம் **(NGT)**

- தேசிய பசுமை தீர்ப்பாயம் 2010ன் தேசிய பசுமை தீர்ப்பாய சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு இடமாக புது டெல்லி உள்ளது. மேலும் போபால், புனே, கொல்கத்தா மற்றும் சென்னை ஆகியவை தீர்ப்பாயத்தின் மற்ற நான்கு அமர்வு இடங்களாக உள்ளன.
- தேசிய பசுமை தீர்ப்பாயம் கட்டாயமாக விண்ணப்பங்கள் அல்லது தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளை 6 மாதங்களுக்குள் தீர்க்க வேண்டும்.
- தலைவர், நீதிபதிகள் மற்றும் நிபுணர் உறுப்பினர்களைக் இத் தீர்ப்பாயம் கொண்டுள்ளது.
- அவர்கள் 5 ஆண்டுகள் பதவியில் இருப்பார்கள் மற்றும் மறு நியமனத்திற்கு தகுதியற்றவர் ஆவர்.
- இந்திய தலைமை நீதிபதியுடன் (CJI) கலந்தாலோசித்து மத்திய அரசால் தலைவர் நியமிக்கப்படுகிறார்.
- நீதித்துறை உறுப்பினர்கள் மற்றும் நிபுணர் உறுப்பினர்களை நியமிக்க மத்திய அரசால் ஒரு தேர்வுக் குழு அமைக்கப்படும்.
- தீர்ப்பாயத்தில் குறைந்தபட்சம் 10 மற்றும் அதிகபட்சம் 20 முழுநேர நீதித்துறை உறுப்பினர்கள் மற்றும் நிபுணர்

| | |
|---|---|
| | உறுப்பினர்கள் இருக்க வேண்டும். |
| காலநிலை நிகழ்வு மற்றும் உணவு பாதுகாப்பு<br><br> | செய்தி<br><br>இந்தியாவில் நிகழும் தொடர் வானிலை விபரீதங்கள் மற்றும் காலநிலை நிகழ்வுகளுடன் உணவு பாதுகாப்பு இணைக்கப்பட்டுள்ளது.<br><br>எல் நினோ-தெற்கு அலைவு **(ENSO)** சுழற்சி.<br><br>எல் நினோ மற்றும் லா நினோ ஆகியவை சிக்கலான வானிலை வடிவங்களாகும். இவை பசிபிக் பகுதியில் உள்ள பூமத்தியரேகை கடல் வெப்பநிலையில் ஏற்படும் மாறுபாடுகளால் ஏற்படுகின்றன. அவை எல் நினோ-தெற்கு அலைவு (ENSO) சுழற்சி என அழைக்கப்படுபவற்றின் எதிர் நிலைகளாகும்.<br><br>• எல் நினோ-தெற்கு அலைவு சுழற்சியானது கிழக்கு-மத்திய பூமத்தியரேகை பசிபிக் பகுதியில் பெருங்கடலுக்கும் வளிமண்டலத்திற்கும் இடையே உள்ள வெப்பநிலை ஏற்ற இறக்கங்களை விவரிக்கிறது.<br>• எல் நினோ மற்றும் லா நினா நிகழ்வுகள் பொதுவாக ஒன்பது முதல் 12 மாதங்கள் வரை நீடிக்கும் ஆனால் சில நீடித்த நிகழ்வுகள் பல வருடங்கள் வரை நீடிக்கும் தன்மை கொண்டது .<br><br>எல் நினோ<br><br>• எல் நினோ என்பது கிழக்கு வெப்பமண்டல பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு நீரின் அசாதாரண வெப்பமயமாதலை விவரிக்கும் ஒரு காலநிலை வடிவமாகும்.<br>• இது எல் நினோ-தெற்கு அலைவு (ENSO) எனப்படும் ஒரு பெரிய நிகழ்வின் "வெப்பமான நிலை " ஆகும்<br>• இது லா நினா நிகழ்வை விட அடிக்கடி நிகழ்கிறது..<br>• எல் நினோ என்பது ஸ்பானிஷ் மொழியில் "சிறு பையன்" அல்லது "குழந்தை கிறிஸ்து" என்பதன் தளர்வான மொழிபெயர்ப்பாகும்.<br>• எல் நினோ என்பது மத்திய-கிழக்கு பூமத்தியரேகை பசிபிக் பகுதியில் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் கடல் நீரின் வெப்பமயமாதல் ஆகும் (பெரு நாட்டின் கடற்கரையில் உள்ள வெப்பநிலை).<br>• எல் நினோவின் போது பசிபிக் பெருங்கடலில் மேற்பரப்பு வெப்பநிலை உயருகிறது.<br>• பூமத்திய ரேகை அருகே வீசும் கிழக்கு-மேற்கு வியாபார காற்றை இது பலவீனப்படுத்துகிறது. |

| | |
|---|---|
| | . <br>• எல் நினோவின் காரணமாக, அமெரிக்காவிலிருந்து ஆசியாவை நோக்கி வீசும் கிழக்கு வர்த்தகக் காற்று, திசை மாறி மேற்குத் திசையாக மாறுகிறது. <br>• மேற்கு பசிபிக் பகுதியிலிருந்து அமெரிக்காவிற்கு வெப்பமான நீரைக் கொண்டுவருகிறது |
| லடாக்கில் உள்ள கட்டுப்பாடு எல்லை கோட்டின்(**LOC**) தொலைதூரத்தில் விமான நிலையத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. <br> | செய்தி <br><br>பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் லடாக்கில் நியோமா விமான நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார் மற்றும் அருணாச்சல பிரதேசத்தில் நெச்சிபு சுரங்கப் பாதையை திறந்து வைத்தார் <br><br>முக்கிய குறிப்புகள்: <br>• சுமார் 200 கோடி ரூபாய் செலவில் லடாக் பகுதியில் நியோமா விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது .மேலும் வான்வழி உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் மற்றும் வடக்கு எல்லையில் உள்ள இந்திய விமானப்படையின் திறனை அதிகரிக்க இது உதவும் . <br>• பாதுகாப்பு அமைச்சரால் சமர்பித்த செயல் திட்டங்களில் அருணாச்சல பிரதேசத்தில் நெச்சிபு சுரங்கப்பாதை, மேற்கு வங்கத்தில் இரண்டு விமானநிலையங்கள், இரண்டு ஹெலிபேடுகள், 22 சாலைகள் மற்றும் 63 பாலங்கள் ஆகியவை அடங்கும். இந்த 90 செயல் திட்டங்களில், அருணாச்சலப் பிரதேசத்தில் 36, லடாக்கில் 26, ஜம்மு & காஷ்மீரில் 11, மிசோரமில் 5, இமாச்சலப் பிரதேசத்தில் 3, சிக்கிம், உத்தரகண்ட் மற்றும் மேற்கு வங்கத்தில் தலா இரண்டு மற்றும் நாகாலாந்து, ராஜஸ்தான் மற்றும் அந்தமானில் மற்றும் நிக்கோபார் தீவுகள் தலா ஒரு திட்டம் செயல்படுத்த உள்ளது |
| ஆயுஷ்மான் பவ | செய்தி <br><br>ஜனாதிபதி திரௌபதி முர்மு ‘ஆயுஷ்மான் பவ்’ திட்டத்தை தொடங்கி வைக்கிறார் <br><br>முக்கிய குறிப்புகள்: <br>• 'ஆயுஷ்மான் பவ்' திட்டத்தின் முன்னெடுப்பு நோக்கமானது நாட்டின் ஒவ்வொரு கிராமும் மற்றும் நகரத்திற்கும் சுகாதார சேவைகள் மற்றும் சுகாதார திட்டங்கள் முழுமையாக சென்றடைய வேண்டும் என்பது ஆகும் <br>• ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் வெற்றியை அடிப்படையாகக் கொண்ட இந்த முன்னெடுப்பு சுகாதார சேவைகளில் ஒரு முன்னுதாரண மாற்றத்தைக் குறிப்பிடுகிறது . <br>• இந்த திட்டமானது சுகாதாரத் துறை, பிற அரசுத் துறைகள் கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள உள்ளூராட்சி அமைப்புகளுடன் இணைந்து கிராம பஞ்சாயத்துகளால் முன்னெடுக்கப்படும் ஒரு கூட்டு முயற்சியாகும். |

| | |
|---|---|
| | • இதன் முக்கிய நோக்கம் ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் சுகாதார சேவையை விரிவு படுத்துவது புவியியல் தடைகளை மீறி அனைவருக்கும் சுகாதார சேவையை கொண்டு சேர்ப்பது ஆகும் |

***Copyright © by Adda247***

*All rights are reserved. No part of this document may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior permission of Adda247.*